டிஜிட்டல் டெய்லி
# அக்ரி-டாக்டர்
agridoctor.in

கல்யாண்
ஜுவல்லர்ஸ்

agridoctor.in | 24.02.2026 செவ்வாய்க்கிழமை | பக்கங்கள் 30 | RNI No.TNTAM/2012/49602 | Vol.13, Issue : 203 - Madurai | Online Edition

# இந்தியாவின் அடுத்த வேளாண் புரட்சி செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் : மத்திய இணையமைச்சர் தகவல்

புது தில்லி, பிப்.23

இந்தியாவின் அடுத்த விவசாயப் புரட்சி செயற்கை நுண்ணறிவால் இயக்கப்படும் என்று மத்திய அறிவியல் – தொழில்நுட்பத் துறை இணையமைச்சர் டாக்டர் ஜிதேந்திர சிங் கூறியுள்ளார். மும்பையில் நேற்று (22.02.26) நடைபெற்ற விவசாயத்தில் செயற்கை நுண்ணறிவு தொடர்பான உச்சி மாநாட்டில் அவர் உரையாற்றினார்.

வேளாண் உற்பத்தித்திறனை பாதிக்கும் ஒழுங்கற்ற வானிலை, சமச்சீரற்ற தகவல் தன்மை போன்றவற்றுக்கு செயற்கை நுண்ணறிவு தீர்வுகளை வழங்கும் என்று கூறினார். விவசாயிகள் பயிரிடுவதை திட்டமிடுவதற்கு உதவும் வகையில் புவி அறிவியல் மற்றும் செயற்கைக்கோள் அமைப்புகள் ஒருங்கிணைக்கப்படும் என்று டாக்டர் ஜிதேந்திர சிங் கூறினார்.

பூச்சி மற்றும் தாவர நோய்களை முன்கூட்டிய முறையில் கண்டறிதல் உட்பட, நோய் எதிர்ப்பு சக்தி கொண்ட பயிர்களை வளர்ப்பதிலும், சுழற்சிப் பயிர் பொருளாதாரத்தை முன்னேற்றுவதிலும் உயிரி தொழில்நுட்பத்தின் பங்கு மிக முக்கியமானதாக இருக்கும் என்றும் அவர் கூறினார். இந்திய மண் வகைகள், பருவநிலை மண்டலங்கள், பயிர் வகைகள் குறித்து பயிற்சியளிக்க உருவாக்கப்படும் செயற்கை நுண்ணறிவு மாதிரிகள் மீது கவனம் செலுத்தப்படுகிறது எனவும் இதை மொபைல் போன்கள் மற்றும் பண்ணை உபகரணங்கள் மூலம் கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படலாம் என்றும் அவர் கூறினார். உலகளாவிய வேளாண் செயற்கை நுண்ணறிவு கட்டமைப்புகளின் வடிவமைப்பாளராக செயல்பட வேண்டும் என்ற நோக்கத்துடன் இந்தியா செயலாற்றி வருவதாக டாக்டர் ஜிதேந்திர சிங் தெரிவித்தார்.

# கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வேளாண் இடுபொருட்களை விற்பனை துவக்கம்



தர்மபுரி, பிப்.23

விவசாயிகளுக்கு வேளாண் இடுபொருட்கள் எளிதில் கிடைத்திடவும், விவசாயிகளின் பயண தூரம் மற்றும் நேரத்தை குறைக்கவும் இனி வரும் காலங்களில் உங்கள் பகுதிக்கு அருகில் உள்ள தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வேளாண் இடுபொருட்களான விதைகள், உயிரியல் கட்டுப்பாட்டு காரணிகள், நுண்ணூட்ட உரங்கள், உயிர் உரங்கள் உள்ளிட்ட இடுபொருட்கள் விற்பனை செய்ய வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் இணைந்து விற்பனை செய்ய உள்ளது.

இது தொடர்பாக தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் வேளாண் இடுபொருட்களை விற்பனை செய்யும் திட்டத்தினை வேளாண்மைத் துறை அமைச்சர் எம்.ஆர்.கே பன்னீர்செல்வம், தர்மபுரி மாவட்டத்தில் துவக்கி வைத்தார். தொடர்ந்து சேலம் மாவட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.ராஜேந்திரன், நேரு கலை அரங்கில் நடைபெற்ற அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் திட்டத்தை துவக்கி வைத்தார்.

சேலம் வட்டாரத்தில் எருமாபாளையம் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கத்தில் இந்நிகழ்ச்சியை வேளாண்மை இணை இயக்குநர் சீனிவாசன், துவக்கி வைத்து திட்டம் பற்றி விளக்க உரையாற்றினார். இந்த நிகழ்ச்சியில் வேளாண்மை துணை இயக்குநர்/மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) கமலம், கூட்டுறவுத்துறை துணை பதிவாளர் முருகன், துணை பதிவாளர் சரவணன், சேலம் சரகம், வேளாண்மை துணை இயக்குநர் (மாநிலத் திட்டம்) நீலாம்பாள், சேலம் வேளாண்மை உதவி இயக்குநர் கவிதா, வேளாண்மை அலுவலர்கள் மகாலட்சுமி மற்றும் சௌமியா உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

agridoctor.in the Tamil Digital daily published and edited by **M.J.Vasudevan**,
18, Chandrakanthi Nagar, Ponmeni, Bye Pass Road, Madurai - 625 016. Ph. : 4366425.

# காளான் வளர்ப்பு காட்சி விளக்கம் பெண்கள் முன்னேற்றத்திற்கு ஊக்கம்



கிருஷ்ணகிரி, பிப்.23

கிருஷ்ணகிரி மாவட்டம், பையூர் தோட்டக்கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தைச் சேர்ந்த மாணவர்கள், ஊரக தோட்டக் கலைப் பணி அனுபவம் (RAWE) திட்டத்தின் கீழ், சேலம் மாவட்டம் வேளாண்மை அறிவியல் நிலையம், சந்தியூரில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

இப்பயிற்சியின் ஒரு பகுதியாக, மாணவர்கள் கெஜ்ஜெல்நாயக்கன் பட்டி கிராமத்தில் ஜீவானந்தத்தின் வயலில் காளான் (Mushroom) வளர்ப்பு குறித்து நேரடி காட்சி விளக்கம் நடத்தினர். இந்த நிகழ்ச்சி முக்கியமாக கிராமப்புற பெண்களை முன்னிறுத்தி ஏற்பாடு செய்யப்பட்டது.

காளான் வளர்ப்பு குறைந்த இடத்தில், குறைந்த முதலீட்டில், குறுகிய காலத்தில் அதிக வருமானம் ஈட்டக்கூடிய சிறந்த தொழிலாகும் என்பதை விளக்கினர். குறிப்பாக, வீட்டு மாடி, அறை அல்லது சிறிய குடிசை போன்ற இடங்களில் கூட இதை எளிதில் தொடங்கலாம் என்பதும் எடுத்துரைக்கப்பட்டது போன்ற செயல் முறைகள் நடைமுறை ரீதியாக விளக்கப்பட்டன.

மேலும், காளான் உணவின் சத்துக்கள் – புரதம், நார்ச்சத்து, தாதுக்கள் நிறைந்தது என்பதும், சந்தையில் அதிக தேவை உள்ளதால் பெண்கள் சுயதொழில் தொடங்குவதற்கு இது நல்ல வாய்ப்பாக இருப்பதும் கூறப்பட்டது. பெண்கள் சுய உதவி குழுக்கள் (SHG) மூலம் குழுவாக காளான் உற்பத்தி செய்து, நேரடி சந்தைப்படுத்தல் அல்லது மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரித்து கூடுதல் வருமானம் ஈட்ட முடியும் எனவும் விளக்கப்பட்டது.

நிகழ்ச்சி முடிவில், பல பெண்கள் காளான் வளர்ப்பை தங்களது வீட்டிலேயே தொடங்க ஆர்வம் தெரிவித்தனர். இந்நிகழ்ச்சி பெண் களின் பாருளாதார முன்னேற்றத்திற்கும், தொழில்முனைவு வளர்ச்சிக்கும் ஊக்கமளிக்கும் வகையில் அமைந்தது.

அக்ரி-டாக்டர்.காம் பொறுப்புத்துறப்பு (Disclaimer): இந்த மின்னிதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு நாளிதழ் பொறுப்பேற்காது. இதன் உரிமையாளரோ, வெளியீட்டு நிறுவனமோ, வெளியீட்டாளரே, ஆசிரியரோ, மற்ற ஊழியர்களோ எந்த வகையிலும் விளம்பரங்களின் உண்மைத் தன்மைக்கு பொறுப்பானவர்கள் அல்ல. வாசகர்கள் தாங்களே ஆய்ந்து அறிந்து சுய விருப்பு அடிப்படையில் தீர்மானிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். விளம்பரதாரர்கள், நிறுவனங்களின் பொருட்கள், சேவைகள் போன்றவை குறித்த செய்திகளுக்கும் மேற்கண்ட பொறுப்புத் துறப்பு பொருந்தும் என்பதையும் அறியவும்.

அக்ரி-டாக்டர்
agridoctor.in Agri Digital daily

KALYAN JEWELLERS

# எல்லா நாளும் தள்ளுபடி உண்டு உங்களுக்கு மட்டும்




கல்யாண் ஜுவல்லர்ஸ்-ல் நகை எடுக்க வரும்போது **அக்ரி டாக்டர் வாசகர்** என்று அறிமுகப் படுத்திக் கொண்டு சிறப்பான சேவையையும், பிரத்யேக தள்ளுபடியும் பெறுங்கள். இந்த தள்ளுபடி உங்களுக்கு மட்டுமே அதுவும் எல்லா நாட்களிலும்.

குறிப்பு: அதிகார பூர்வமாக கல்யாண் ஜுவல்லர்ஸ் தள்ளுபடி அறிவிக்கும் நாட்களில் அந்த தள்ளுபடி மட்டும் செல்லுபடியாகும்.மேலும் உதவி தேவை எனில் கடையில் இருந்தே எங்களை தொடர்பு கொள்ளுங்கள்.

96331 42000, 86104 71220. 73558 87778, 99408 27084, 80563 05483

# விவசாயிகளுக்கு தனித்துவமான அடையாள அட்டை வழங்கும் முகாம்

## வேளாண்மை அதிகாரிகள் ஆய்வு




அரியலூர், பிப்.23

அரியலூர் மாவட்ட வேளாண் இணை இயக்குனர் ஜெ.உலகம்மை முருகக்கனி, விவசாயிகளுக்கு தெரிவித்த தகவல் யாதெனில், மத்திய அரசு மூலம் வழங்கும் விவசாயி களுக்கான தனித்துவமான அடையாள அட்டை வழங்கும் முகாம் அரியலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து வட்டாரங்களிலும் ஞாயிறு முதல் புதன் கிழமை வரை (22.2.26 முதல் 25.2.25) நடைபெற உள்ளது.

அரியலூர் மாவட்டத்தில் 1,32,231 விவசாயிகள் உள்ளனர். இதில் 89,477 விவசாயிகள் பிரத்தியேக தனித்துவ அடையாள அட்டைக்கு பதிவு செய்துள்ளனர். மீதமுள்ள 42,754 விவசாயிகள் உடனடியாக முகாமை பயன்படுத்தி பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. இந்த தனித்துவமான அடையாள அட்டை இனிவரும் காலங்களில் வேளாண்மை உழவர் நலத்துறை மற்றும் சகோதரத்துறைகளில் பயன்பெற அவசியமாகிறது. மேலும் பாரதப் பிரதமரின் விவசாயிகள் கௌரவ நிதி திட்டத்தில் தொடர்ந்து பயன்பெற தனித்துவ அடையாள அட்டை மிகவும் அவசியமானதாக உள்ளது. எனவே விவசாயிகள் அனைவரும் தங்களது வட்டாரத்தில் உள்ள வேளாண் அலுவலகத்தில் நேரடியாக சென்று பதிவு செய்து தனித்துவ அடையாள அட்டை எண் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. விவசாயிகளே இதற்காக தாங்கள் கொண்டு செல்ல வேண்டிய ஆவணங்களாக தங்களது ஆதார் அட்டை, நில உரிமை சிட்டா மற்றும் ஆதார் எண் இணைக்கப் பட்டுள்ள கைபேசியை எடுத்துச் சென்று பதிவு செய்து பயன் பெறுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

விவசாயிகளே இது தொடர்பான சந்தேகங்களை தங்களது வட்டார வேளாண்மை அலுவலகத்தை அணுகி நிவர்த்தி செய்து கொள்ளுங்கள். விவசாயிகளே உடனடியாக இந்த முகாமினை பயன்படுத்திக் கொள்ளுங்கள். விவசாயிகளே பிரத்தியேக அடையாள அட்டை என்பது உங்கள் உரிமை, அதைப் பெற்றுக் கொள்வது உங்களது கடமை. இன்று சென்னையிலிருந்து வேளாண்மை விற்பனை மற்றும் வேளாண்மை வணிகம் துறையின் மூலம் வருகை புரிந்த கண்காணிப்பு அலுவலர் மோகன், வேளாண்மை இணை இயக்குனருடன், வேளாண்மை உதவி இயக்குனர் தரக்கட்டுப்பாடு அக்ரி டாக்டர் ராதா கிருஷ்ணன், டீ பலூர் வட்டாரம், ஜெயங்கொண்டம் வட்டாரம் மற்றும் திருமானூர் வட்டாரத்தில் ஆய்வு செய்தனர். இவ்வாய்வில் வேளாண்மை உதவி இயக்குனர், வேளாண்மை அலுவலர்கள் மற்றும் வேளாண்மை உதவி அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# மக்காசோளத்தில் இனக் கவர்ச்சி பொறி பயன்பாடு குறித்து செயல் விளக்கம்

மதுரை, பிப்.23




மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் நான்காம் ஆண்டு மாணவர் மோஹித் மெஹ்றா ஊரக வேளாண்மை பணி அனுபவ திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் குழுவில் பயிற்சி பெற்று வருகிறார். இதன் ஒரு பகுதியாக, ஒட்டன்சத்திரம் சத்திரப்பட்டி கிராமத்தில், மக்காசோளத்தில் இனக்கவர்ச்சி பொறி பயன்பாடு குறித்து செயல் விளக்கம் அளித்தார். இதில் இனக்கவர்ச்சி பொறியை தயாரிப்பது எப்படி என்றும் அதன் செயல்பாடு மற்றும் பயிர்களில் பூச்சி மேலாண்மையில் அதன் பயன்பாடு குறித்தும் எடுத்துரைக்கபட்டது. இதில் அப்பகுதியை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# இ சரக் போர்டல் - ஒரு பார்வை

**இ-சரக் போர்டல் :** மருத்துவ தாவரத் துறையில் தகவல் பரிமாற்றத்தை மேம்படுத்துதல், மருத்துவ தாவரத் துறையில் உள்ள அனைத்து பங்குதாரர்களுக்கும் தகவல் பரிமாற்றத்தை எளிதாக்கும் வகையில், இந்திய அரசின் ஆயுஷ் அமைச் சகத்தின் கீழ் செயல்படும் தேசிய மருத்துவ தாவரங்கள் வாரியம் (NMPB), BISAG-N உடன் இணைந்து இ-சரக் (e-Charak) போர்ட்டலை உருவாக்கியுள்ளது. இது விவசாயிகள் முதல் வாங்குபவர்கள் வரை அனைவருக்கும் ஒரு ஒருங்கிணைந்த தளமாக செயல்படுகிறது.

**இ-சரக் போர்ட்டலின் நோக்கம் :** இ-சரக் போர்ட்டலின் முதன்மை நோக்கம், மருத்துவ தாவரத் துறையில் உள்ள பங்கு தாரர்களுக்கு இடையே வெளிப்படையான மற்றும் திறமையான தொடர்புகளை ஏற்படுத்துவதாகும். இது மூலிகைகள், நறுமணப் பொருட்கள், மூலப் பொருட்கள் மற்றும் அறிவுக்கான மின்-சேனலாக செயல்படுகிறது. இதன் மூலம் வர்த்தகத்தை மேம் படுத்துகிறது மற்றும் மருத்துவ தாவரங்களின் நிலையான பயன்பாட்டை ஊக்குவிக்கிறது. முக்கிய அம்சங்கள் இ-சரக் போர்ட்டல் மற்றும் அதன் மொபைல் செயலி பல பயனுள்ள அம்சங்களை வழங்குகிறது.

**பங்குதாரர் இணைப்பு :** விவசாயிகள், சேகரிப்பாளர்கள், வர்த்தகர்கள், உற்பத்தியாளர்கள் மற்றும் ஏற்றுமதியாளர்கள் போன்ற பல்வேறு பங்குதாரர்களை தடையின்றி இணைக்கிறது.

**வர்த்தக வசதி :** பயனர்கள் தங்கள் விற்பனைக்கான பொருட் களை பதிவு செய்யலாம். வாங்குபவர்கள் கிடைக்கும் பொருட் களை (எ.கா.,முருங்கை சாறு, மூலிகைகள்) உலாவலாம் மற்றும் விற்பனையாளர்களை நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

**தகவல் பரிமாற்றம் :** மருத்துவ தாவரங்கள் தொடர்பான அறிவு மற்றும் தகவல்களைப் பகிர்ந்து கொள்வதற்கான ஒரு தளமாக செயல்படுகிறது.

**பல மொழி ஆதரவு :** ஆங்கிலம், இந்தி, குஜராத்தி, கன்னடம், தமிழ் மற்றும் தெலுங்கு உள்ளிட்ட பல இந்திய மொழிகளில் கிடைக்கிறது, இது இந்தியா முழுவதும் அணுகலை உறுதி செய்கிறது.

**பங்குதாரர்கள் மற்றும் பயன்கள் :** இ-சரக் போர்ட்டல் மருத்துவ தாவரத் துறையில் உள்ள அனைவருக்கும் குறிப்பிடத்தக்க நன்மைகளை வழங்குகிறது. விவசாயிகள் மற்றும் சேகரிப்பாளர்கள் தங்கள் விளை பொருட்களை நேரடியாக வாங்குபவர்களுக்கு விற்கவும், சந்தை விலைகள் மற்றும் சாகுபடி நுட்பங்கள் பற்றிய தகவல்களைப் பெறவும் உதவுகிறது. வர்த்தகர்கள் மற்றும் உற்பத்தியாளர்கள் மூலப் பொருட்களை எளிதாகக் கண்டறியவும், புதிய சப்ளையர்களுடன் தொடர்பு கொள்ளவும், சந்தை தேவைகளைப் பூர்த்தி செய்யவும் உதவுகிறது.

ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அறிஞர்கள் மருத்துவ தாவரங்கள் தொடர்பான தகவல்கள் மற்றும் ஆராய்ச்சிகளை அணுகவும், பகிர்ந்து கொள்ளவும் ஒரு தளத்தை வழங்குகிறது. செயல்படுத்துதல் இ-சரக் போர்ட்டல் இணையதளம் (www.e-charak.in) மற்றும் மொபைல் செயலி (Google Play Storeஇல் கிடைக்கிறது) மூலம் அணுகலாம். இது மருத்துவ தாவரத் துறையில் டிஜிட்டல் மயமாக்கலை ஊக்குவிப்பதன் மூலம், சந்தை இணைப்புகளை வலுப்படுத்துகிறது மற்றும் வெளிப்படைத்தன்மையை அதிகரிக்கிறது.

தகவல் : **கோ.சுரேஷ்குமார், மைக்ரோ கிரீன் வளர்ப்பு செயல்பாட்டாளர், இயற்கை விவசாய ஆர்வலர், கோவில்பட்டி.**

## தென்னைச் சாகுபடியில் ஊடுபயிர் வேளாண் கல்லூரி மாணவரின் விழிப்புணர்வு நிகழ்ச்சி



மதுரை, பிப்.23

வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், மதுரையை சேர்ந்த நான்காம் ஆண்டு படிக்கும் மாணவன் கா.சஞ்சய் கிராமப்புற வேளாண்மை பணி அனுபவத்திட்டம் (RAWE 2025-26) ஒட்டன்சத்திரம் குழு நடத்திய தென்னைச் சாகுபடியில் ஊடுபயிர் (Coconut Intercropping) என்பது நில பயன்பாட்டை அதிகரிக்கவும், கூடுதல் வருமானம் பெறவும் உதவும் சிறந்த முறையாகும். தென்னை மரங்களுக்கிடையே யான இடை வெளியில் வாழை, பாக்கு, மிளகு, கோகோ, கிழங்கு வகைகள் மற்றும் மருத்துவத் தாவரங்களை நடுவது, நீர் மேலாண்மை மற்றும் களைக் கட்டுப்பாட்டிற்கு உதவுகிறது.

Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- 25 ஆண்டுகள் உத்தரவாதம் நம்பிக்கைக்கு அடையாளம்
- 100% LEAD-FREE பைப்புகள் ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- ISI சான்று பெற்ற பைப்புகள் தரத்திற்கு ஒரே அடையாளம்
- ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- 67 GRADE மூலப்பொருட்கள் அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- TEST CERTIFICATE – QR CODE மூலமாக ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- FREE ON-SITE TESTING விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- சரியான எடை, தடிமன் ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - 20mm to 250mm (All Classes) | ASTM UPVC PIPE - 21mm to 114mm (SCH 40, SCH80) | ISI CONDUIT PIPE - 16mm to 63mm (Light, Medium, Heavy) | ISI PLUMBING PIPE - 25mm to 50mm (15KG) | ISI BOREWELL CASING PIPE - 125mm to 250mm |
|---|---|---|---|---|

PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
Rithvik Pipe Company, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
Rithvik Pipe Company, Opp.Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741

# விவசாயிகளுக்கான தனித்துவ அடையாள எண் பெறுவதற்கு கிராமங்களில் சிறப்பு முகாம் வேளாண்மை இணை இயக்குநர் தகவல்

புதுக்கோட்டை, பிப்.23

புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள், மத்திய மாநில அரசின் பல்வேறு மானிய திட்டங்களை பெறுவதற்கு தங்கள் நில விவரங்களை பதிவு செய்து அடையாள எண் பெறுவது கட்டாய மாகும். எனவே, விவசாயிகள் தங்கள் பகுதியில் நடைபெறும் சிறப்பு முகாம்களில் உடனடியாக கலந்து கொண்டு கட்டண மின்றி பதிவு செய்து பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேளாண்மை இணை இயக்குநர் மு.சங்கரலட்சுமி அழைப்பு விடுத்துள்ளார்கள்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திகுறிப்பில், விவசாயிகள் மத்திய மாநில அரசின் பல்வேறு மானிய திட்டங்களை பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற தொடர்புடைய ஆவணங்களை ஒவ்வொருமுறையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.

இதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையிலும் அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாகவும் அனைத்து விவரங்களையும் மின்னணுமுறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் (Agri Stack) செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்சமயம் புதுக்கோட்டை மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் 1,26,871 விவசாயிகள் பதிவு செய்துள்ளனர். மேலும், அனைத்து விவசாயிகளும் இத்திட்டத்தில் பதிவு செய்திட அனைத்து கிராமங் களிலும் பதிவுகள் மேற்கொள்ளும் பணி நடைபெற்று வருகிறது. எனவே, விவசாயிகள் தங்களது ஆதார் எண், கைபேசி எண், நில உடைமை விவரங்கள் ஆகியவற்றை இணைத்திட தங்கள் பகுதி வேளாண்மைத் துறை, தோட்டக்கலைத் துறை, வேளாண் விற்பனை மற்றும் வணிகத்துறை அலுவலர்களை அணுகி 25.2.26க்குள் பதிவு செய்து பயன் பெற கேட்டுக்கொள்ளப்படுகிறது.

விவசாயிகளின் நில உடைமை விவரங்கள் இணைக்கப்பட்ட பின்னர் அனைத்து விவரங்களுக்கு ஒரு ங்கிணைக்கப்பட்ட ஆதார் எண் போன்ற தனித்துவமான தேசிய அளவிலான அடையாள

எண் ஒவ்வொரு விவசாயிக்கும் வழங்கப்படும். மேலும், பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN)–ல் தொடர்ந்து தவணைத் தொகைகளை பெறுவதற்கு விவசாயிகளின் நில உடைமை களை பதிவு செய்து அடையாள எண் பெறுவது கட்டாயம் ஆகும்.

எனவே, விவசாயிகள் தங்களது பகுதி வேளாண்மை உழவர் நலத்துறை அலுவலர்கள் அல்லது அருகில் உள்ள பொது சேவை மையங்களை நேரடியாக அணுகி தங்கள் நில உடைமை விவரங்கள், ஆதார், கைபேசி எண் ஆகிய விவரங்களை அளித்து எவ்வித கட்டணமுமின்றி விரைந்து பதிவு செய்து பயன் பெறுமாறு அதில் தெரிவித்துள்ளார்.

# e - NAM பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண்மை கல்லூரி மாணவிகள்

சிவகங்கை, பிப்.23



ஊரக வேளாண் அனுபவ பயிற்சி திட்டத்தின் கீழ், தேவ கோட்டை வட்டம், திராணி கிராமத்தில் விவசாயிகளுக்கான e-NAM (National Agriculture Market) குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சி நிகழ்ச்சி 19.02.26 அன்று நடைபெற்றது. இந்நிகழ்ச்சியை வேளாண் கல்லூரி இறுதியாண்டு மாணவர்கள் ஏற்பாடு செய்து நடத்தினர்.

பயிற்சியின் போது, e-NAM என்பது நாடு முழுவதும் உள்ள வேளாண் சந்தைகளை ஒருங்கிணைக்கும் ஆன்லைன் தளம் என்பதும், இதன் மூலம் விவசாயிகள் பல்வேறு சந்தைகளின் தினசரி விலை நிலவரங்களை அறிந்து தங்களது விளை பொருட்களை சிறந்த விலையில் விற்பனை செய்ய முடியும் என்பதும் விளக்கப்பட்டது.

மேலும், e-NAM தளத்தில் பதிவு செய்வது, விவசாயி அடையாள விவரங்கள் சேர்ப்பது, விளைபொருட்களின் தர மதிப்பீடு (Quality Assaying), ஆன்லைன் ஏலம் (e-bidding) செயல்முறை மற்றும் விற்பனைக்குப் பிந்தைய தொகையை நேரடியாக வங்கி கணக்கில் பெறும் முறைகள் குறித்து செயல் முறை விளக்கங்கள் வழங்கப்பட்டது.

இத்தளத்தின் மூலம் இடைத்தரகர்களின் தலையீடு குறைந்து, வெளிமாநில சந்தைகளுடன் இணைந்து அதிக வருமானம் பெறும் வாய்ப்பு இருப்பதாக மாணவர்கள் எடுத்துரைத்தனர். மேலும், டிஜிட்டல் பரிவர்த்தனையின் பாதுகாப்பு, வெளிப்படைத்தன்மை மற்றும் நேரச்சிக்கனத்தின் முக்கியத்துவம் குறித்து விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. விவசாயிகள் தங்களது சந்தேகங்களை கேட்டு விளக்கங்கள் பெற்றனர். e-NAM பயன்பாட்டை மொபைல் மூலம் எளிதாக பயன்படுத்தும் வழிமுறைகள் மற்றும் பதிவு செய்ய தேவையான ஆவணங்கள் பற்றியும் எடுத்துரைக்கப்பட்டு, சந்தை தகவல்களை தொடர்ந்து கண்காணிப்பதன் மூலம் சரியான நேரத்தில் விற்பனை செய்யும் முக்கியத்துவமும் விளக்கப்பட்டது.



# வேளாண் இயந்திரங்களில் எளிதாக வாடகைக்கு பெற மேம்படுத்தப்பட்ட இ-வாடகை செயலி-2.0




வேளாண்மை தொழிலில் படிப்படியாக இயந்திரங்களின் வருகை உயர்ந்து கொண்டே போகிறது. அந்த வகையில் தமிழக அரசின் வேளாண் பொறியியல் துறையின் செயல் பாடுகள் நாளுக்கு நாளாக மேம்படுத்தப்பட்டு விவசாயி களின் பொருளாதாரத்தை அதிகரிக்க குறைந்த செலவில் வாடகை வேளாண் இயந்திரங்கள் (டிராக்டர் முதல் அறுவடை இயந்திரங்கள் வரை) வழங்கி வருகிறது. ஏற்கனவே இ-வாடகை செயலி பயன்பாட்டில் உள்ளது. அதனை தற்போது 37.28 லட்சம் செலவில் 'மேம்படுத்தப்பட்ட இ-வாடகை கைபேசி (MOBILE APP) உருவாக்கப்பட்டு தற்போது பயன்பாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கதாகும்.

**கடந்த 5 ஆண்டுகளின் வேளாண் பொறியியல் துறையின் செயல்பாடு (வேளாண் இயந்திரங்கள் வழங்குவது) பற்றி தெரியுமா?**

கடந்த 5 ஆண்டுகளில் 1320 வேளாண் வாடகை இயந்திர மையங்கள் (CUSTOM HIREING CENTRE) அமைக்கப்பட்டு உள்ளதாகவும் 77,499 வேளாண் கருவிகள் விவசாயி களுக்கு மானியத்தில் வழங்கப்பட்டுள்ளதாகவும் தரவுகள் உள்ளன.

**இந்த 2.0 வாடகை செயலியின் முக்கிய நோக்கம்**

வேளாண் இயந்திரங்கள் (AGRICULTURAL IMPLEMENTS) எளிதாக பட்டி தொட்டிகளில் இருந்த இடத்தில் இருந்து பெற உதவியாக இருக்கும். இயந்திரங்களின் பயன்பாட்டினை விவசாயிகளிடத்தில் அதிகரித்தல்.

**இந்த செயலின் பயன்கள் தெரியுமா?**

1) இது மேம்படுத்தப்பட்ட டிஜிட்டல் தளம், உழவர் செயலியுடன் ஒருங்கிணக்கப்படுவதால் விவசாயிகள் தங்களுக்கு தேவை யான வேளாண் இயந்திரங்கள், தேவையான நேரத்தில் தங்களுடைய இருப்பிடத்திலே இருந்து ஆன்லைன் மூலமாக முன்பதிவு செய்ய முடியும்.

2) இடைத்தரகர்களின் தேவையின்றி குறுக்கீடியின்றி விவசாயிகள் நேரடியாக தொடர்பு கொள்ளலாம்.

3) உழவு, விதைப்பு, களை எடுப்பு, அறுவடை போன்ற முக்கிய காலகட்டத்தில், வேளாண் இயந்திரங்கள் முன்கூட்டி யே முன்பதிவு செய்வதின் மூலமாக விவசாய பணிகள் தங்கு தடையின்றி நடைபெற உதவும்.

4) இ-வாடகை செயலியில் வேளாண் பொறியியல் துறையானது விவசாயிகள் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க (PACB) வேளாண் இயந்திரங்கள் மற்றும் தனியார் வேளாண் இயந்திர உரிமையாளருக்கிடையே ஒரு ஒருங்கிணைப்பாக (CO-ORDINATION) AGRICULTURAL ENGI-NEERING DEPARTMENT) செயல்படும்.

5) இதுவரை 892 தொடக்க வேளாண்மை சங்கங்களும், 5952 தனியார் வேளாண் இயந்திர உரிமையாளர்களும் என மொத்தமாக 6844 சேவை வழங்குநர்கள், 9359 வேளாண் இயந்திரங்களும் 6780 கருவிகளும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்குவதற்கு பதிவு செய்துள்ளதாக தெரிகிறது.

தகவல் : **அக்ரி சு.சந்திரசேகரன், வேளாண் ஆலோசகர், அருப்புக்கோட்டை. 94435 70289.**

## தலைக் கவசம் உயிர்க் கவசம்



# விவசாயிகள் நில உடமைகளை பதிவு செய்ய பிப்ரவரி 26 கடைசி நாள்

ராணிப்பேட்டை, பிப்.23

ராணிப்பேட்டை மாவட்டம், வாலாஜா விவசாயிகள் அரசின் பல்வேறு திட்டப் பலன்களைப் பெறுவதற்கு தங்களது நில உடைமை விவரங்கள், பயிர் சாகுபடி அறிக்கை போன்ற தொடர்புடைய ஆவணங்களை ஒவ்வொரு முறையும் சமர்ப்பிக்க வேண்டியுள்ளது. இதில் ஏற்படும் காலதாமதத்தினை தவிர்க்கும் வகையிலும் அரசின் திட்டங்களில் விவசாயிகள் குறித்த நேரத்தில் பயன்பெற ஏதுவாகவும், அனைத்து விவரங்களையும் மின்னணு முறையில் சேகரித்திட தமிழ்நாட்டில் வேளாண் அடுக்குத் திட்டம் (AgriStack) செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

தற்போது, விவசாயிகளின் பதிவு விவரங்களுடன், ஆதார் எண், கைபேசி எண், நில உடைமை விவரங்களையும் விடுபாடின்றி பதிவு செய்து தனித்துவமான அடையாள எண் வழங்கும் பணி வேளாண்மை துறையினரால் சம்பந்தப்பட்ட வருவாய் கிராமத்தில் நடைபெற்று வருகிறது. மேலும் பொது சேவை மையங்களிலும் பதிவு செய்து பயன் பெறலாம்.

2026 ஆம் ஆண்டு முதல், பிரதம மந்திரி கவுரவ நிதித் திட்டம் (PMKISAN), பயிர்க்காப்பீடுத் திட்டம் (PMFBY) போன்ற ஒன்றிய மற்றும் மாநில அரசின் திட்டங்களில் விவசாயிகள் தேசிய அளவிலான தனித்துவ அடையாள எண் இருந்தால் மட்டுமே பயன் பெற முடியும்.

இதுவரை பதிவு செய்யாத விவசாயிகள் உடனடியாக கம்ப்யூட்டர் சிட்டா, ஆதார் அட்டை, ஆதார் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள கைப்பேசி ஆகியவற்றுடன் வேளாண்மை துறை, தோட்டக்கலைத்துறை, வேளாண் வணிகத் துறை, அருகில் உள்ள பொது சேவை மையம் ஆகியவற்றை அணுகி, 26.02.26 ஆம் தேதிக்குள் அடையாள எண் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வாலாஜா வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் திலகவதி தெரிவித்தார்.

**மரம் வளர்ப்போம்! மழை பெறுவோம்!**

# Rithvik Pipe

# 25 ஆண்டுகள் உத்தரவாதத்துடன் கிடைக்கும் ரித்விக் PVC பைப்புகள்




## பைப் மட்டும் வாங்காமல் நிம்மதியையும் சேர்த்து வாங்குங்கள்

- **25 ஆண்டுகள் உத்தரவாதம்**
  நம்பிக்கைக்கு அடையாளம்
- **100% LEAD-FREE பைப்புகள்**
  ஆரோக்கியமான தண்ணீர், ஆரோக்கியமான வாழ்க்கை
- **ISI சான்று பெற்ற பைப்புகள்**
  தரத்திற்கு ஒரே அடையாளம்
- **ISI பைப்புகள் மட்டும் தயாரிக்கும் நிறுவனம்**–தரத்தின் தனிப்பெரும் அடையாளம்
- **67 GRADE மூலப்பொருட்கள்**
  அதிக வலிமை, நீண்ட ஆயுள்
- **TEST CERTIFICATE – QR CODE மூலமாக**
  ஒவ்வொரு பைப்பிலும் நேரடியாக பதிவிறக்கம் செய்துகொள்ளலாம்
- **FREE ON-SITE TESTING**
  விற்பனைக்கு பின் தரம் உங்கள் கண்முன்னே
- **சரியான எடை, தடிமன்**
  ஏமாற்றமில்லா தயாரிப்பு

## PRODUCT RANGES

| ISI PVC PIPE - | ASTM UPVC PIPE - | ISI CONDUIT PIPE - | ISI PLUMBING PIPE - | ISI BOREWELL CASING PIPE - |
|---|---|---|---|---|
| 20mm to 250mm (All Classes) | 21mm to 114mm (SCH 40, SCH80) | 16mm to 63mm (Light, Medium, Heavy) | 25mm to 50mm (15KG) | 125mm to 250mm |

**PVC PIPE / UPVC PIPE / CONDUIT PIPE / CPVC PIPE / SOLVENTS / PVC FITTINGS LATERAL HOSE / GARDEN HOSE / SUCTION HOSE / WATER TANK**

## RITHVIK PIPES PROUDLY TRUSTED BY

Office
**Rithvik Pipe Company**, Kannaki Street, Mahalingapuram, Pollachi, Coimbatore Dist - 642002
E-mail : sales@rithvikpipes.com
Website : rithvikpipe.com

Factory
**Rithvik Pipe Company**, Opp Kamaraj Colony, R.V.P Pudur, Palakkad Dist - 678555
E-mail : rithvikpipe@gmail.com
Website : rithvikpipe.com

**For Dealership & Projects Enquiries - 96458 77721, 96458 77741**

# தென்னையை தாக்கும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தும் முறையை பயிற்சி விளக்கமாக எடுத்துரைத்த வேளாண் கல்லூரி மாணவி!

தேனி, பிப்.23

தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டாரத்திற்கு உட்பட்ட உ.அம்மாப்பட்டி ஊராட்சியில் இருக்கும் அம்பாசமுத்திரம் கிராமத்தில், மதுரை வேளாண் கல்லூரி மாணவி கே.பத்மாவதி, தனது கிராமப்புற வேளாண் பணி அனுபவ திட்டத்தின் கீழ் தென்னை மரங்கள் வளர்க்கும் விவசாயிகளுக்காக, தென்னையை தாக்கும் வெள்ளை ஈக்களை கட்டுப்படுத்தும் முறையை பயிற்சி விளக்கமாக எடுத்துரைத்தார்.

**உயிரியல் கட்டுப்பாடு :** என்கார்சியா ஒட்டுண்ணியை பயன்படுத்தலாம். பச்சை அழுகுருட்டான் என்ற ஒட்டுண்ணியை 400 முட்டைகள் / ஏக்கர் என்ற அளவில் பயன்படுத்தலாம். வாழை, சீமை அன்னாசி போன்ற இடைப்பயிர்களை வளர்த்து இயற்கை எதிரிகளை ஊக்குவிக்கலாம்.

**இயந்திர கட்டுப்பாடு :** மஞ்சள் நிற ஒட்டுப் பொறிகள் (20/ஏக்கர்), மஞ்சள் விளக்கு பொறி (1/ஏக்கர்) பயன்படுத்தலாம். வலுவான நீர் தெளிப்பு இருத்தல் வேண்டும்.

**இயற்கை முறை :** வேப்ப எண்ணெய் (5 மிலி/லிட்டர்), வேப்பம் புண்ணாக்கு (5 கிலோ/மரம்) பயன்படுத்தலாம். மேலும், வெள்ளை ஈக்களின் தாக்கத்தால் ஏற்படக்கூடிய புகை போன்ற பூச்சிகளை அகற்ற 25 கிராம் மைதா மாவு/லிட்டர் தண்ணீர் என்ற அளவில் கொதிக்க வைத்து தெளிக்கவும். இவை மட்டுமின்றி, கண்காணிப்பு மற்றும் ஆரம்பகால கண்டறிதல், இரசாயன பூச்சிகொல்லிகளை தவிர்த்தல் போன்ற பிற மேலாண்மை நுட்பங்களையும் விளக்கமாக எடுத்துரைத்து விவசாயிகளுக்கு பயிற்சி அளித்தார் வேளாண் மாணவி.

**தலைக் கவசம் உயிர்க் கவசம்**
**முறையாக தலைக் கவசம் அணிவோம்**

# பூச்சிகளை கட்டுப்படுத்தும் ஒட்டுப் பசை மருந்து பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்திய வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.23

பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள் கிராமப்புற அனுபவ பயிற்சியின் கீழ் நாமக்கல் மாவட்டம், எருமப்பட்டி வட்டாரம், தேவராயபுரம் கிராமத்தில் விவசாயிகளுக்கு செயல் விளக்கம் மூலம் பூச்சிகளை கட்டுப்படுத்தும் ஒட்டுப் பசை மருந்து பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மரங்களில் ஏற்படும் பூச்சி தாக்குதலை கட்டுப்படுத்த 'ஒட்டும் பசை மருந்து' (Sticky Glue Paste) என்பது மிகவும் பயனுள்ள மற்றும் எளிய ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறையாகும். இந்த ஒட்டும் பசை மரத்தின் தண்டு பகுதியில் வளையமாக பூசப்படுவதால், கீழிருந்து மேலே ஏற முயலும் எறும்புகள், புழுக்கள், இலை உண்ணும் பூச்சிகள், பட்டாம்பூச்சி இளம் புழுக்கள் போன்றவை தண்டை கடக்க முடியாமல் அதில் ஒட்டிக்கொண்டு தடுக்கப்படுகின்றன. இதனால் இலைகள், பூக்கள் மற்றும் பழங்கள் பாதுகாக்கப்பட்டு மரத்தின் ஆரோக்கியமும் விளைச்சலும் மேம்படுகின்றன.

எறும்புகள் பல சமயங்களில் இலைகளில் வாழும் சுரப்பிப் பூச்சிகள் (aphids), வெள்ளை ஈக்கள் (whiteflies), மற்றும் மெலி பூச்சிகள் (mealy bugs) போன்றவற்றை மரத்தில் பரப்ப உதவுகின்றன. இவ்வகை பூச்சிகள் மர சாற்றை உறிஞ்சி வளர்ச்சியை பாதிக்கின்றன. ஒட்டும் பசை தடுப்பு அமைப்பதால், எறும்புகள் மேலே செல்ல முடியாமல் தடுக்கப்படுவதால், இப்பூச்சிகளின் பரவலும் குறைகிறது. இதனால் மரத்தின் இயல்பான வளர்ச்சி சீராக நடைபெறுகிறது.

இந்த ஒட்டும் பசை மருந்து பொதுவாக மாமரம், சப்போட்டா, கொய்யா, மாதுளை, சிட்ட்ரஸ் வகை மரங்கள், தேங்காய் மற்றும் அலங்கார மரங்களில் பயன்படுத்தப்படுகிறது. மரத்தின் தண்டு தரையில் இருந்து சுமார் 1 முதல் 1.5 அடி உயரத்தில், 5–10 செ.மீ அகலத்தில் வளையமாக பூசுவது சிறந்தது. பூசுவதற்கு முன் தண்டின் மேற்பரப்பை சுத்தமாக துடைத்து உலர்த்த வேண்டும். சில நேரங்களில் பிளாஸ்டிக் அல்லது பாலித்தீன் பட்டையை சுற்றி அதன் மேல் ஒட்டும் பசையை பூசினால் மரத்தின் தோலுக்கு நேரடி சேதம் ஏற்படாமல் பாதுகாக்க முடியும். இந்த முறையின் முக்கிய நன்மைகள் என்னவெனில், இது ரசாயன பூச்சிக்கொல்லிகளைப் போல சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளை விக்காது, பயனுள்ள பூச்சிகளுக்கு குறைந்த பாதிப்பை ஏற்படுத்தும், எளிதாக பயன்படுத்த முடியும் மற்றும் குறைந்த செலவில் பயனளிக்கும். மேலும், இது நீண்ட நாட்கள் செயல்பட கூடியதால் அடிக்கடி மருந்து தெளிக்க வேண்டிய அவசியம் குறைகிறது.

எனவே, ஒட்டும் பசை மருந்து பயன்படுத்துதல் என்பது விவசாயிகள் மற்றும் தோட்டக்காரர்கள் பாதுகாப்பான, சுற்றுச் சூழல் நட்பு மற்றும் பயனுள்ள பூச்சி கட்டுப்பாட்டு முறையாகும். இது மரங்களை பூச்சி தாக்குதலிலிருந்து பாதுகாத்து, நல்ல வளர்ச்சி மற்றும் அதிக விளைச்சலை பெற உதவுகிறது.

## மாம்பழத் தோட்டத்தை பார்வையிட்டு விவசாயியுடன் கலந்தரையாடிய வேளாண் கல்லூரி மாணவர்கள்



மதுரை, பிப்.23

வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், மதுரை மாணவர்கள் தங்களின் FPO (Farmers Producer Organization) இணைப்பு பயிற்சியின் ஒரு பகுதியாக, FPO உறுப்பினரான எம்.காளிமுத்துவின் 30 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள மாம்பழத் தோட்டத்தை பார்வையிட்டனர்.

இத்தோட்டத்தில் காசா லட்டு, சிந்தூரா, மல்கோவா மற்றும் கள்ளாமை போன்ற பல்வேறு உயர்தர மாம்பழ வகைகள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. இந்த பயணத்தின் போது மாணவர்கள் மாம்பழ தோட்ட பராமரிப்பு முறைகள், ஊட்டச்சத்து மேலாண்மை, பாசன நடைமுறைகள் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான தகவல்களை நேரடியாக அறிந்து கொண்டனர்.

மேலும், FPO நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் பார்வதி, மாணவர்களுடன் இணைந்து கலந்து கொண்டார். இப்பயணம் மாணவர்களுக்கு நடைமுறை வேளாண்மை அனுபவத்தை வழங்குவதில் பயனுள்ளதாக அமைந்தது.



# பட்டு நூற்பகத்தைப் பார்வையிட்ட வனக்கல்லூரி மாணவர்கள்





கிருஷ்ணகிரி, பிப்.23

கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வட்டத்தில் ஊரக பட்டுப்புழுவியல் பணி அனுபவத் திட்டத்தில் தங்கி வேலை செய்யும் வனக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் மாணவர்கள் அப்துஸ் ஸலாம், பாரிவேல், தருண் பிரசன்னா, தினேஷ்குமார், கோகுல், இந்து பிரகாஷ் மற்றும் ஜனார்த் தனன் ஆகியோர் யாரப் பட்டு நூற் பகத்தைப் பார்வையிட்டனர். அதன் பொறுப்பாளர் முனீர்பாய், மாணவர் களுக்கு காட்டேஜ் பேசின் நூற்புக்கருவி, முறுக்கேற்றும் கருவி மற்றும் அதில் மேற்கொள்ளப்படும் செயல்பாடுகள் குறித்தும், பயன்படுத்தும் தொழில்நுட்பத்தைப் பற்றி அவர் விளக்கினார்.

பட்டுக்கூடு அங்காடியின் ஏல முறைகள் பற்றியும் அரசாங்க லெவி தொகை பற்றியும் விளக்கினார். இது மாணவர்களுக்கு ‘பிந்தைய பட்டுக்கூடு தொழில்நுட்பம்‘ குறித்து ஒரு விளக்கத்தை ஏற்படுத்தியது. பட்டுப்புழுவியலை பொறுத்தவரை நூற்பகங்களுக் கென்று ஒரு தனி இடம் உண்டு.

இந்த 100 பாகங்களில் தயாராகும் நூற்கட்டுக்கள் அடுத்ததாக சாயமேற்றும் தொழிற்சாலைகளுக்கு கொண்டு செல்லப்படு கின்றன. சாயம் ஏற்றப்பட்ட பின் வீவிங் தொழில்நுட்பத்தின் உப பொருட்களாக பயன்படுகின்றன.

# வாழை ஏலத்தை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவிகள்



நாமக்கல், பிப்.23

நாமக்கல் மாவட்டம். கபிலர்மலை ஒன்றியத்தில் கிராமப்புற விவசாய அனுபவ பணித்திட்டத்தில் (RAWE) பிஜிபி வேளாண்மை அறிவியல் கல்லூரி மாணவிகள், கபிலர்மலை வட்டாரத்திலிருந்து பரமத்தி வேலூர் பகுதியில் நடைபெறும் வாழை ஏலத்தை பார்வையிட்டனர்.

● கர்ப்பூரவள்ளி, பூவன், ரஸ்தாளி, மொந்தன், ஜி-9 உள்ளிட்ட பல்வேறு வகை வாழைகள் பார்வையிடப்பட்டன.

● தமிழ்நாட்டில் கமின் இன்றி (நேரடி சந்தைப்படுத்தல் முறையில்) வாழை ஏலம் நடைபெறும் ஒரே இடமாக இது திகழ்கிறது.

● விவசாயிகள் தங்களது விளைபொருட்களை லாபகரமான விலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

● குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள் இதன்மூலம் அதிக அளவில் பயன் அடைந்து வருகின்றனர்.

# நெல் விலை தேர்வுக்கான முட்டை மிதவை முறை



தஞ்சாவூர், பிப்.23

தஞ்சாவூர் மாவட்டம், செங்கிபட்டி அருகே உள்ள ஆர்.வி.எஸ் வேளாண் கல்லூரியில் பயிலும் மாணவி ப.பிரதீபா, ஊரக வேளாண் பணி அனுபவத் திட்டம் கீழ் அங்குள்ள விவசாயி களுக்கு, பயிர் விளைச்சலை உயர்த்துவதில் தரமான விதை தேர்வு முக்கிய பங்கு வகிக்கிறது. இதை விவசாயிகளுக்கு எளிய முறையில் விளக்குவதற்காக, நெல் பயிரில் விதை தேர்விற்கான முட்டை மிதவை முறை குறித்துசெயல் விளக்கக் காட்சி நிகழ்ச்சி நடத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில், முதலில் நெல் விதை தேர்வின் அவசியம் பற்றி விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்பட்டது. தரமற்ற மற்றும் முழுமையான வளர்ச்சி அடையாத விதைகளை பயன்படுத்தும் போது முளைப்பு வீதம் குறைவதும், செடி வளர்ச்சி சீராக இல்லாததும்,விளைச்சல் பாதிக்கப்படுவதும் றித்தும் விளக்கம் அளிக்கப்பட்டது. பின்னர் ஒரு பாத்திரத்தில் தண்ணீரை நிரப்பி அதில் கோழி முட்டை வைக்கப்பட்டது. அதன் பிறகு இதில் சிறிதளவு உப்பு சேர்த்து கலந்து, முட்டை தண்ணீரில் மிதக்கும் நிலைக்கு வந்த போது, அதுவே சரியான உப்பு கரைசல் அடர்த்தி என விவசாயிகளுக்கு காட்டப்பட்டது. அதன் பிறகு நெல் விதைகளை அந்த கரைசலில் விடவும். தற்போது மிதக்கும் விதைகள் தரமற்றவை என கண்டறியப்பட்டது. இந்த தரம் பிரிக்கப்பட்ட விதையை உலர்த்தி பின் உபயோகிக்கலாம்.இந்த நிகழ்ச்சியின் மூலம் நெல் விதை தேர்வில் அறிவியல் முறையை பயன்படுத்துவதன் முக்கியத்துவம் விவசாயிகளுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

# கற்றல், தயாரிப்பு, விற்பனை – வேளாண் மாணவர்களின் முழுமையான முயற்சி




கடலூர், பிப்.23

கடலூர் மாவட்டம் சிதம்பரத்தில் அமைந்துள்ள அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் வேளாண் புலத்தைச் சேர்ந்த இளங்கலை வேளாண்மை பயிலும் JK Batch மாணவர்கள், ELAGR 401 - Agricultural Waste Management மற்றும் ELAGR 402 - Organic Production Technology (Experiential Learning - அனுபவ வழிக் கற்றல்) பாடங்களின் ஒரு பகுதியாக, மீன் அமிலம் பஞ்சகவ்யம் மற்றும் மண்புழு உரம் ஆகியவற்றை தயாரித்தனர்.

மாணவர்கள் மொத்தமாக 100 லிட்டர் பஞ்சகவ்யம், 60 லிட்டர் மீன் அமிலம் மற்றும் மண்புழு உரம் தயாரித்து, அவற்றை விற்பனை செய்ய சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழக நிர்வாகக் கட்டிடம் (Lake View Garden) அருகில் சிறப்பு விற்பனைக் கூடம் ஒன்றை அமைத்துள்ளனர்.

இவ்விற்பனைக்கூடத்தை வேளாண் புலம் உழவியல் துறை தலைவர் பேராசிரியர் முனைவர் பு.சுந்தரி மற்றும் உதவி பேராசிரியர் முனைவர் லு.சுசீந்திரன் ஆகியோர் புதன்கிழமை (பிப்ரவரி 11) மாணவர்களின் முன்னிலையில் திறந்து வைத்தனர். மாணவர்கள் தினமும் காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை பஞ்சகவ்யம், மீன் அமிலம் மற்றும் மண்புழு உரத்தை விவசாயிகளுக்கும் பொதுமக்களுக்கும் விற்பனை செய்து வருமானம் ஈட்டி வருகின்றனர். மேலும், மொத்தமாக வாங்கும் விவசாயிகளுக்கு சிறப்பு தள்ளுபடி வழங்கப்படுகிறது.

பஞ்சகவ்யம், மீன் அமிலம் மற்றும் மண்புழு உரம் பெற விரும்புவோர் கீழ்க்கண்ட எண்களில் தொடர்பு கொள்ளலாம்.

80724 54177 – நிதிஷ்குமார், 85240 01367 – பார்வேந்தன்.

தகவல் : **நிதிஷ் குமார் க, IV இளங்கலை வேளாண்மை, வேளாண் புலம், அண்ணாமலை பல்கலைக்கழகம், சிதம்பரம்.**

கல்யாண்
ஜுவல்லர்ஸ்



Toll Free No. 1800 - 4257333

# சுருள் வெள்ளை ஈ கட்டுப்பாடு குறித்து பயிற்சி முகாம் நடத்திய வேளாண் கல்லூரி மாணவி



தேனி, பிப்.23

தேனி மாவட்டம், போடி நாயக்கனூர் வட்டாரத்திற்குட்பட்ட விஸ்வாசபுரம் கிராமத்தில், RAWE (Rural Agricultural Work Experience) திட்டத்தின் ஒரு பகுதியாக, தென்னைப் பயிரில் தாக்கம் ஏற்படுத்தும் சுருள் வெள்ளை ஈ (Spiralling Whitefly) கட்டுப்பாடு குறித்து விவசாயிகளுக்கான பயிற்சி முகாம் நடத்தப்பட்டது.

இப்பயிற்சியில், தென்னை இலைகளில் ஏற்படும் பாதிப்பு அறிகுறிகள், பூச்சியின் வாழ்நிலைச் சுழற்சி மற்றும் அதனால் ஏற்படும் உற்பத்தி இழப்புகள் குறித்து விளக்கப்பட்டது. மேலும், மஞ்சள் ஒட்டுச் சறுக்குகள், பாதிக்கப்பட்ட இலைகளை அகற்றுதல், நீர்த் தெளிப்பு மூலம் கட்டுப்பாடு, உயிரியல் கட்டுப்பாடு முறைகள் மற்றும் தேவையான சமயத்தில் பாதுகாப்பான பூச்சிக்கொல்லி பயன்பாடு குறித்து விவசாயிகளுக்கு செய்முறை விளக்கம் வழங்கப்பட்டது.

இந்த பயிற்சியை மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய மாணவி ஏஞ்சல் பிஜு நடத்தினார். விவசாயிகள் பயிற்சியில் ஆர்வமுடன் கலந்து கொண்டு, சந்தேகங்களுக்கு விளக்கம் பெற்றனர். இத்தகைய பயிற்சிகள் மூலம் தென்னை உற்பத்தியை மேம்படுத்தவும், பூச்சி தாக்கத்தை குறைக்கவும் முடியும் என தெரிவிக்கப்பட்டது.

# காலிபிளவரில் வைர முதுகு அந்துப்பூச்சி மேலாண்மை குறித்த பயிற்சி



திண்டுக்கல், பிப்.23

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் அடுத்த கொல்லப்பட்டி கிராமத்தில், காலி பிளவரில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் வைர முதுகு அந்துப்பூச்சி (Diamond-back Moth) மேலாண்மை குறித்த விவசாயிகளுக்கான பயிற்சி நடைபெற்றது.

மதுரை வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தின் இறுதி ஆண்டு மாணவர் செல்வ அஸ்வின்.செ, தனது ஊரக வேளாண்மைப் பணி அனுபவத் திட்டத்தின் (RAWE) கீழ் இந்தப் பயிற்சியை வழங்கினார்.

**பயிற்சியின் முக்கிய அம்சங்கள்**

**தாக்குதலின் அறிகுறிகள் :** புழுக்கள் இலைகளின் அடிப்பகுதியில் இருந்து பச்சையத்தை சுரண்டி உண்பதால், இலைகள் கண்ணாடி போன்று ஜன்னல் வடிவில் காட்சியளிப்பது குறித்து விளக்கப்பட்டது.

**கட்டுப்படுத்தும் முறைகள் :** வரப்புப் பயிராக கடுகு பயிரிட்டு பூச்சிகளைக் கவர்ந்து அழித்தல். வேப்பங்கொட்டை கரைசல் (5%) தெளித்தல் போன்ற ஒருங்கிணைந்த பூச்சி மேலாண்மை முறைகள் செயல்முறை விளக்கத்துடன் கற்பிக்கப்பட்டன.

இப்பயிற்சியில் அப்பகுதியைச் சேர்ந்த திரளான விவசாயிகள் கலந்து கொண்டனர்.

# தென்னை சாகுபடியில் மூடாக்கு முறைக்கு செயல்விளக்கம்



மதுரை, பிப்.23

மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பயிலும் மாணவர் மோஹித், கிராமிய வேளாண் பணிப்பயிற்சி (RAWE) திட்டத்தின் ஒரு பகுதியாக, திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டாரத்திற்குட்பட்ட சத்ரபட்டி கிராமத்தில் தென்னை பயிரில் மூடாக்கு முறையை குறித்து விவசாயிகளுக்கு செயல் விளக்கம் வழங்கினார்.

இந்த நிகழ்ச்சியின் போது, தென்னை தோட்டங்களில் மண்ணின் ஈரப்பதத்தை பாதுகாத்து, களை வளர்ச்சியை கட்டுப்படுத்தவும், மண்ணின் வளத்தை மேம்படுத்தவும் மூடாக்கு முறை எவ்வாறு உதவுகிறது என்பதைக் குறித்து விரிவாக விளக்கினார். மேலும், இயற்கை வளங்களை பயன்படுத்தி குறைந்த செலவில் மூடாக்கு மேற்கொள்ளும் நடைமுறைகள் குறித்தும் எடுத்துரைத்தார்.

# தேனீ பெட்டி அமைப்பு குறித்து விளக்கிய வேளாண் கல்லூரி மாணவன்



மதுரை, பிப்.23

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம், கொட்டாம்பட்டியில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவன் ட.ஜாசீர், வேளாண் பணி அனுபவத் திட்டத்தின் கீழ் இங்குள்ள விவசாயிகளுக்கு தேனீ பெட்டி அமைப்பு மற்றும் விழிப்புணர்வு குறித்து விளக்கப் பயிற்சி நடத்தினார்.

இந்நிகழ்ச்சியில் தேனீ வளர்ப்பின் முக்கியத்துவம், தேன் உற்பத்தியின் நன்மைகள் மற்றும் விவசாய நிலங்களில் தேனீ பெட்டி அமைப்பதன் பயன்கள் குறித்து விரிவாக எடுத்துரைக் கப்பட்டது. தேனீ வளர்ப்பு (Honey Bee Rearing) என்பது குறைந்த முதலீட்டில் அதிக வருமானம் தரக்கூடிய துணைத் தொழிலாகும்.

தேனீக்கள் மகரந்தச் சேர்க்கையை அதிகரிப்பதன் மூலம் பயிர் களின் விளைச்சலை 15-25% வரை உயர்த்த உதவுகின்றன. மேலும், தேன், மெழுகு போன்ற பொருட்கள் மூலம் கூடுதல் வருமானம் பெறலாம்.

**தேனீ பெட்டி அமைப்பின் முக்கிய நன்மைகள் :**

- பயிர்களில் மகரந்தச் சேர்க்கை அதிகரிப்பு
- விளைச்சல் மற்றும் தர உயர்வு
- கூடுதல் வருமானம் பெறுதல்
- குறைந்த முதலீட்டில் நிலையான தொழில் வாய்ப்பு

**தேனீ பெட்டி அமைக்கும் முறை**

விவசாய நிலத்தில் பூக்கள் அதிகமாக காணப்படும், அமைதியான மற்றும் நிழலான இடத்தில் தேனீ பெட்டியை அமைக்க வேண்டும். பெட்டிகள் தரையில் இருந்து சற்று உயரத்தில் வைக்கப்பட வேண்டும். அருகில் சுத்தமான நீர் வசதி ஏற்படுத்த வேண்டும். காலந்தோறும் பெட்டிகளை பரிசோதித்து பராமரிப்பு மேற்கொள்ள வேண்டும்.

இந்த முறையை பின்பற்றுவதன் மூலம் விவசாயிகள் விளைச்சல் அதிகரிப்புடன் கூடுதல் வருமானமும் பெற முடியும் என தெரிவிக்கப் பட்டது.

# உஞ்சனை ஒழுங்குமுறை சந்தையில் மூடப்பட்ட ஏல முறையை பார்வையிட்ட வேளாண் கல்லூரி மாணவர்கள்



நாமக்கல், பிப்.23

நாமக்கல் மாவட்டம், திருச்செங் கோட்டில் உள்ள உஞ்சனை பகுதியில் செயல்பட்டு வரும் Regulated Market வளாகத்தை பி.ஜி.பி. வேளாண்மை கல்லூரி மாணவர்கள், மார்க்கெட்டிங் அலுவலர் லக்ஷ்மிபெருமாள் வழிகாட்டுதலின் கீழ் பார்வையிட்டனர்.

இங்கு நடைமுறையில் உள்ள மூடப்பட்ட ஏல (Closed Auction) முறை குறித்து மாணவர்கள் அறிந்து கொண்டனர். இந்த முறையில் வியாபாரிகள் தங்களின் விலையை ரகசியமாக சமர்ப் பிப்பதால், அதிகபட்ச விலை வழங்குபவருக்கு பொருள் ஒதுக்கப் பட்டு, விவசாயிகளுக்கு நியாயமான மற்றும் உயர்ந்த விலை கிடைக்கிறது. மேலும், சந்தையில் தரப்படுத்தல், துல்லியமான எடை கணக்கீடு மற்றும் உடனடி பணம் வழங்கும் நடைமுறைகள் சிறப்பாக செயல்பட்டு வருகின்றன என்பது விளக்கப்பட்டது. முக்கியமாக, விவசாயிகள் தங்கள் விளைபொருட்களை கிடங்கில் 6 மாதங்கள் வரை சேமித்து, சந்தையில் அதிக தேவை இருக்கும் காலத்தில் விற்பனை செய்யும் வசதி இருப்பதை மாணவர்கள் அறிந்தனர். இவ்வாய்ப்புகள் மூலம் விவசாயிகள் விலை சரிவைத் தவிர்த்து, நல்ல வருமானம் பெற முடியும் என அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த பார்வை பயணம் சந்தை மேலாண்மை மற்றும் விவசாயி களுக்கான ஆதரவு திட்டங்கள் குறித்து மாணவர் களுக்கு பயனுள்ள அனுபவமாக அமைந்தது.

# நானோ யூரியா தெளிப்பு பற்றிய செயல்முறை விளக்கம் அளித்த வேளாண் கல்லூரி மாணவி

மதுரை, பிப்.23

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டாரம், வீலிநாயக்கன் பட்டி கிராமத்தில் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தை சேர்ந்த இறுதி ஆண்டு மாணவி K.A.அபிசயா, விவசாயிகளுக்கு நானோ யூரியா தெளிப்பு பற்றிய செயல்முறை

விளக்கம் அளித்தார்.



இதில் செடிகளுக்கு எவ்வளவு யூரியா தெளிக்கவேண்டும், இதன் பயன்கள் என்ன மற்றும் செடிகள், பயிர்களுக்கு எவ்வளவு நைட்ரஜன் சத்து கொடுக்கிறது என்பதுடன், நானோ யூரியாவை தெளித்து செயல்முறை விளக்கத்துடன் விளக்கினார். மேலும் இதில் விவசாயிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# பனமரத்துப்பட்டி வட்டாரத்தில் வேளாண் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சி!



நாமக்கல், பிப்.23

நாமக்கல் மாவட்டம், பிஜிபி வேளாண் அறிவியல் கல்லூரி இறுதி ஆண்டு வேளாண் கல்லூரி மாணவர்கள் பனமரத்துப்பட்டியில் உள்ள தொடக்க நிலை பள்ளி வளாகத்தில் வோளாண் கண்காட்சி மற்றும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வேளாண்மை துறை மூலம் செயல்படும் திட்டங்கள் மற்றும் புதிய தொழில்நுட்பங்களை காட்சி படுத்தும் வகையில் தென்னையில் காண்டமிருக வண்டு கட்டுபடுத்தும் செயல்விளக்கம், பயிர்களை தாக்கும் பூச்சிகளை கட்டுப்படுத்த ஏற்ற வண்ண ஒட்டுப் பொறி, பழப் பயிர்களில் ஏற்படும் நோய் தாக்கம் மற்றும் பூச்சி தாக்கம் அறிகுறிகள் காட்சிப்படுத்தப்பட்டன, உயிர் உரங்கள், நுண்ணூட்ட கலவை , மாடித் தோட்டம் தொகுப்பு, மற்றும் மாணவர்கள் உருவாக்கி வேளாண் கருவிகள் மாதிரி, சொட்டு நீர் பாசனம் அமைப்பு , பரன் மேல் ஆடு வளர்ப்பு, குளிர் சாதன கிடங்கு, மயில் விரட்டும் கருவி, விதை விதைப்பு கருவி, நுண்ணறிவு விவசாயம், காளான் வளர்ப்பு, ஆகியவை காட்சிப்படுத்தப்பட்டன. இதில் பனமரத்துப்பட்டி வேளாண்மை இயக்குனர் சாகுல் அமீத், துணை வேளாண்மை அலுவலர் ராமு, பனமரத்துப்பட்டி வட்டார முன்னோடி விவசாயி களான தங்கவேல், ராமசாமி, விவசாயிகள் மற்றும் பிஜிபி வேளாண் கல்லூரியை சார்ந்த பேராசிரியர்கள் பூவரசன் ,முத்துராஜா மற்றும் மாணவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

